செ.வெ.எண்:08 நாள்:04.11.2017

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை ஒன்றியம் ரெட்டியார்பட்டி பகுதியில் நடைபெற்ற வரும் மெகா தூய்மை பணிகள் மற்றும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

--------

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை ஒன்றியம் ரெட்டியார்பட்டி பகுதியில் பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் மற்றும் சுகாதார துறையின் மூலம் மெகா தூய்மை பணிகள் மற்றும் கொசு ஒழிப்பு பணிகள் இன்று (04.11.2017) நடைபெற்றது. இப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்கள்.

ரெட்டியார்பட்டி மெயின் ரோடு மற்றும் பல்வேறு தெரு பகுதிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வீடு வீடாக சென்று ஆய்வு மேற்கொண்டார்கள். காலை 7 மணி முதல் 9.15 மணி வரை நூற்றுக்கு மேற்பட்ட வீடுகளுக்கு நேரில் சென்று ஆய்வு செய்தார். கொசு புழுக்கள் கண்டறியப்பட்ட வீடுகளுக்கு நோட்டீஸ் வழங்கவும் தொடர்ந்து கொசு புழுக்கள் கண்டறியப்படும் வீடுகளுக்கு அபராதம் விதிக்கவும் உத்தரவிட்டார். தூய்மை பணியாளர்களை கூடுதலாக நியமித்து பல்வேறு பகுதிகளில் உள்ள குப்பைகளை உடனடியாக அகற்ற உத்தரவிட்டார். மேலும் கொசு ஒழிப்பு புகை மருந்து அடிக்கும் கருவிகள் கூடுதலாக கொள்முதல் செய்யவும் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின் போது ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திரு.சக்திவேல், சுகாதார பணிகள் துணை இயக்குநர் மரு.செந்தில்குமார், வட்டார மருத்துவர் ஜஸ்டின், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.சண்முகதாய், திருமதி.ஆறுமுககனி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.